மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வினாவிற்கு முன்னால், மாண்புமிகு நண்பர் திரு. ஜேம்ஸ் கேட்ட வினா நம்முடைய பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து அகற்றப்படும். நடவடிக்கைக் குறிப்பிலும் செய்தித்தாள்களிலும் வெளிவராது என்று 235-வது விதிப்படி அறிவிக்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் வேலைகளில் கழிவு நீர் திட்டம்

*72 **வினா—திரு. வை. சுவாமிநாதன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா— முற்பகல். 10 00

கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து யூனியன்களால் நிறைவேற்றப்பட்டு வரும் சாலை போடுதல், குடிநீர் வசதி செய்தல், பள்ளிக் கட்டடம் கட்டுதல் ஆகிய வேலைகளுடன் கழிவு நீர் திட்டமும் சேர்த்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேல் மட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்காக ஒதுக்கப்படும் தொகை வீதிகளுக்குப் பைப் லைன் விஸ்தரிப்பதற்கும் செலவிடப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கும், அதையொட்டி அந்தப் பகுதியிலுள்ள வீதிகளுக்கு தண்ணீர்க் கிடைக்கக்கூடிய வசதிக்கும் சேர்ந்து இணைக்கப்பட்ட திட்டமாகத்தான் இது செயல்படுத்தப்படுகிறது. ஆகவே அது பற்றிய பிரச்சினைக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(திரு. பி. ஜி. கருத்திருமன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு நடைமுறைக் கேள்வியை எழுப்ப விரும்புகிறார் என்று நினைக்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே, ஒழுங்குப் பிரச்சினையொன்றும் நான் எழுப்பவில்லை. கனம் சபாநாயகருக்கு ஒரு வேண்டுகோள். மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுப் பிரேரணைகள் கொடுப்பதற்குக் குறிப்பிட்ட தேதி தீர்ந்துவிட்டது என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும், சட்ட மன்றத்திற்குப் புதிதாக வந்திருக்கக்கூடிய உறுப்பினர்கள் சிலருக்கு நடைமுறைகளெல்லாம் தெரியாத காரணத்தால், வெட்டுப் பிரேரணைகள் கொடுப்பதற்கான கால வரம்பை இன்னும் இரண்டொரு நாள் தள்ளி வைத்தால் நன்றாக இருக்கும் என்கிற என்னுடைய வேண்டுகோளை விடுக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து பேரவையிலே இனிமேல் வேண்டுகோள் விடாமல் இருக்கும்படியாகக் கேட்டுக்